**Anode Fabricators Pvt Ltd**
*Innovation In Inert Metals*
MMO, Platinized Ti & Nb Anodes

#48, Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 22781149/1150 Fax: 22781362 Email: info@tianode.com Web: www.tianode.com

# Inter-Organizational News Letter – August 05

## MAN OF THE MONTH



**Mr. P.GOPALAKRISHNAN – Production**
**Innovation of tool for welding machine**

## FORECASTING 05-06

Turnover : 125% ↑
Employment : 25% ↑
Profitability : 100% ↑
Modernization : in coating Plant →
Rejection growth : 100% ↓

## TESTIMONIALS

**Customers:**
Up to May 05 : 137 Nos
Up to June 05 : 142 Nos

**Performance: June 05**
Turnover growth : 17.70%
Employment growth: 03.17% ↓
100% Attendance : 18.03%

## KEY PERSONS

| | |
|---|---|
| M.P.V. Jaykumar | - CEO. |
| RM. Ravi Chandran | - Marketing. |
| T. Saravanan | - QA & M |
| T. Ramesh | - Stores & Purchase. |
| T. Amaladhas | - Plating. |
| N. Murugan | - Production. |
| M. Suyampu | - Finance. |
| C. Sounder Suresh | - Out Sourcing. |

## MANAGEMENT

Ms. P.E. Nancy – Director
Mrs. J. Vanajambika – Director

## ACHIEVEMENT




| | | |
|---|---|---|
| Goal (05-06) | 125% | |
| Achivement 05-06 | 17.70% | -7.3% |
| Achivement 04-05 | 100% | |

# THE WINNER NEVER QUITS

*and*

# THE QUITTER NEVER WINS

Two boys while walking down the road saw two milk cans being loaded for the delivery in a nearby city. Seeing no one around, the boys lifted off the covers of the cans and dropped in each a big bullfrog. After sometime the cans were picked up and loaded for delivery. During the journey, the bullfrog in can No.1 said, "This is terrible, I cannot lift off the cover of the can because it is too heavy. I have never had a milk bath before, and I cannot reach to the bottom of the can to get enough pressure to lift the cover, so what is the use…" and he gave up trying and quit.

When the cover of the can No.1 was taken off there was a dead bullfrog. The same conditions existed in can No. 2 and the frog said to himself: "Well I can't lift off the cover because it is too light and too heavy. I cannot drill a hole to save myself, but from Father Neptune there is one thing I learned to do in liquids and that is to swim". So, he swam, and swam, and swam and churned a lump of butter and sat on it, and when the cover was lifted off, out he jumped and was saved…

- S. Jayakumar, Pondicherry.

**வெற்றிப் பாதையில்…**

திட்டமிடுகிறோம். சில நேரங்களில் தோல்வி காண்கிறோம். அதனால் என்ன? சோர்ந்தா போவது?
ஒரு சர்க்கரைத் தூளை ஓர் எறும்பு இழுத்துச் செல்வதைக் கண்டேன். இரண்டையும் பிரித்தேன். ஏறும்பு போனது. திரும்பி வந்தது மீண்டும் இழுத்தது. பிரித்தேன். திரும்பவும் போய்வந்து இழுத்தது. திரும்பத் திரும்ப அப்படிச் செய்தேன். நான் சோர்ந்து போனேன். அது வென்றது. அடடே! இந்த குணம் நம்மில் எத்தனை பேருக்கு இல்லாமல் போய்விட்டது.

சிலருக்கு பாராட்டினால்தான் உற்சாகம் வருகிறது. இது கிச்சுக்கிச்சு மூட்டி வரவழைக்கப்படுகிற சிரிப்பைப் போன்றது. நிலைக்காது. எப்போதெல்லாம் மின்சாரம் நிற்கிறதோ, அப்போதெல்லாம் உடனே ஜெனரேட்டர் ஓடுவது போல், எப்போதெல்லாம் உற்சாகம் குறைகிறதோ அப்போதெல்லாம் உள்ளுக்குள் இருக்கும் உற்சாக ஜெனரேட்டர் ஓட ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் நம் வளர்ச்சி நிரந்தரமாகும்.

— லேனா தமிழ்வானன்.

**தொழில் கோட்பாடு…**

தலை சிறந்ததையே உற்பத்தி செய்வோம்!
எப்போதும் நேர்மையாக இருப்போம்!
குறித்த நேரத்திற்கு முன்பே பொருட்களை வழங்குவோம்!
வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியாய் வைப்போம்!

… 2

## FUNCTIONAL WISHES



**Independence day – August 15, 2005**

Best Wishes by Staff Members.

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. United Bank of India |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |

## ADVISE CORNER

### தடுமாற்றம் வரும்போது...

குழப்பம் நேர்ந்ததை மறைக்காமல் சொல்லுங்கள்!
விளக்கங்கள் தேவையில்லை, வெளிவரப் பாருங்கள்!
மறுபடியும் நேராமல் மாற்றுவழி தேடுங்கள்!
எவரால் நேர்ந்தது? மனம்விட்டுப் பேசுங்கள்!

## முரண்பாடு

மந்திரி வருகிறார்
மரம் நடும் விழாவிற்கு!
மரங்கள் வெட்டப்படுகின்றன
அவர் பேசுகின்ற மேடைக்காக...!

– C. Lakshmipathy
Production

## கோட்பாடு...

நேரம் ஒரு பெரிய சொத்து.
அதை முதலீடு செய்பவர்கள் புத்திசாலிகள்.
விரயம் செய்பவர்கள் முட்டாள்கள்.

– ஜிம்ரான்

கடன்களைக் கட்டி முடித்திடுங்கள்!
இப்பேதைய செலவுகளை சரிபாருங்கள்!
ஒவ்வொரு மாதமும் கொஞ்சமாவது சேமியுங்கள்!
வீண் செலவுகளைப் பட்டியலிட்டுத் தவிர்த்திடுங்கள்!

## QUIZ

SARVE HANARABLE என்ற வாசகத்தைக் கொண்ட ராணுவ பிரிவு.
– OFFICERS TRAINNING ACCADEMY
கிண்டி தேசியப்பூங்காவின் பழையப்பெயர்
– GUINDY LODGE
Fourth Estate என்பது – PRESS (பத்திரிகை) என்று பொருள்.

C. Sounder Suresh
Out-sourcing

## BIRTH DAY WISHES



| | | |
|---|---|---|
| Mr. R. Rajendran | - H/o. R. Jayanthi | - August 03 |
| Mr. G. Vignesh | - Store Incharge | - August 06 |
| Mr. P. Suresh Baskar | - EDP Engineer | - August 13 |
| A. Ashmi | - D/o. T. Amaladhas | - August 14 |
| Master A. Ashline | - S/o. T. Amaladhas | - August 14 |
| Ms. P.E. Nancy | - Director | - August 19 |
| R. Jeyashri | - D/o. R. Jayanthi | - August 23 |
| Mrs. R. Renuka | - W/o. RM. Ravichandran | - August 28 |
| Master P.Arun Kumar | - S/o. P. Porselvam | - August 29 |

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவை நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!!

**Best Wishes by, Staff Members.**

புதுக்கணக்கு!

மலையை புரட்டும் இலட்சியத்தோடு
மனிதா தொடங்கு புதுக்கணக்கு!
விலையாய் உழைப்பைக் கொடுத்தால்
வளைந்து கொடுக்கும் விதிக்கணக்கு!!

புலம்பல் ராகம் பாடுபவர்க்கு
புலரும் பொழுதுகள் புதிர்க்கணக்கு!
கிளம்பும் கதிர்போல் எழுந்தால் உனது
கிழக்கில் தினமும் ஒளிக்கணக்கு!!

வாழ்வின் போக்கை விளக்கிக் கொண்டால்
வரவு வைப்பாய் புகழ்க்கணக்கு!
நோக்கம் எதுவென நன்றாய்த் தெரிந்தால்
நிச்சயம் வெல்லும் மனக்கணக்கு!!

வரவு செலவாய் வெற்றி தோல்விகள்
வரட்டும் எழுது நிஜக்கணக்கு!
சரியாய் எதையும் செய்து கொண்டே வா
ஒருநாள் வெல்லும் உன் கணக்கு!!

மரபன மைந்தன் ம.முத்தையா

புதிய யோசனைகள்,
புதிய கனவுகள்,
புதிய இலட்சியங்கள்
ஏற்படும்படியாக வாழ்வதே
உண்மையான சுதந்திரம்.

— ரொல்ட் ஐக்ஸ்

~*~*~*~

### விழிப்புணர்ச்சியின் பலன்

ஒரு சலவைத் தொழிலாளியிடம் ஒரு கழுதை இருந்தது. சுறுசுறுப்பான கழுதை அது. அதன் செயல்வேகம் கண்டு அக்கம்பக்கத்தினர் பொறாமை கொண்டனர். ஒருநாள் அதைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர். ஒரு குழியில் அந்தக் கழுதையைத் தள்ளி, மண்ணைப் போட்டு மூடிவிடுவது என்பதுதான் அவர்கள் திட்டம்.

கழுதை வரும் பாதையில் குழிவெட்டி, இலை தழைகளால் மூடி வைத்திருந்தார்கள். எதிர்பார்த்தபடியே கழுதை உள்ளே விழுந்தது. உடனே அதன் மீது மண்ணை வெட்டிப் போடத் தொடங்கினார்கள். முதுகில் ஒரு சுமை மண் விழுந்ததுமே கழுதை அதனை உதறியது. மண் விழ விழ உதறிக்கொணடே இருந்தது. மேடாக உயர உயர கழுதை மேலே வந்தது.

நாம் விழிப்போடு இருந்தால், நமக்கெதிரான விஷயங்களைப் பயன்படுத்தியே மேலே வந்துவிட முடியும்.

~*~*~*~

சிறுகதைகள்,
துணுக்குகள்
கவிதைகள், கட்டுரைகள்
பணியாளர்கள் மற்றும்
குடும்ப
உறுப்பினர்களிடமிருந்து
வரவேற்கப்படுகிறது.
— Editor

### நமக்கென்ன...

ஒரு வீட்டில் கோழி, ஆடு, பன்றி ஆகியவை வளர்க்கப்பட்டன. ஓர் எலியும் அவற்றுடன் நட்பாய் இருந்தது. அந்த வீட்டில் எலிப்பொறி வாங்கி வந்ததைத் பார்த்து எலி பதறியது.

கோழியிடம் சென்று ஆலொசனை கேட்டது, "அதனா[...] கோழி. ஆட்டிடம் சென்று எலி அழுதது. "அதனால் எனக்கென்ன" என்றது ஆடு. பன்றியிடம் சென்று புலம்பியது. "அதனால் எனக்கென்ன" என்றது பன்றி. நள்ளிரவில் 'படீர்' என்ற சத்தத்துடன் எலிப்பொறி மூடிக்கொண்டது. எலியைப் பிடிக்க வந்த பாம்பின் வால் மாட்டிக் கொண்டது. இருளில் நடந்து வந்த குடும்பத் தலைவியைப் பாம்பு கடித்தது. சிகிச்சையில் காய்ச்சல் ஏற்பட்டது. கோழி சூப் கொடுக்கச் சொன்னார் மருத்துவர். கோழி வெட்டப்பட்டது. "பன்றிக்கறி நல்லதென்று" பக்கத்து வீட்டில் சொன்னார்கள். பன்றி வெட்டப்பட்டது. குணமானதும் கோவிலில் பிரார்த்தனை நிறைவேற்றினார்கள். ஆடு வெட்டப்பட்டது.

'நமக்கென்ன' என்று யாரும் எதிலிருந்தும் விலக முடியாது. அடுத்தவர் மீதான அக்கறையே நமக்கும் நன்மை செய்யும்.

